சூரிய
# காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00



விநோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



மலர் 1 சனிக்கிழமை 14 - 2 - 1998 இதழ் 13


# இக்பால் அத்தாஸின் மீது கொலைப் பயமுறுத்தல்

சென்ற செவ்வாய்க்கிழமை "சூரிய காந்தியில்" "ராணுவச் செய்திகளைச் சூடாகத் தரும் இக்பால் அத்தாஸ்" என்று ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

அந்தக் கட்டுரையில் "பாதுகாப்புத் துறையின் உயர்மட்ட அதிகாரிகளின் அந்தரங்கங்களை அம்பலப்படுததும் காரணத்தால் இவர் சில உயர் அதிகாரிகளின் கடுமையான சீற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார் என்பது உண்மை! இவர் மிக மோசமாக வேவு பார்க்கப்பட்டிருக்கிறார். இவரது தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறார். ஆள் எதற்கும் மசிகிற பேர்வழியாகத் தெரியவில்லை" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்போது இவரை மசிய வைக்க இன்னொரு பயங்கர முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சென்ற வியாழன் இரவு இவர் இவரது வீட்டில் கொலை மிரட்டலுக்கு ஆளாகியிருக்கிறார்.

## கொலைப் பயமுறுத்தலில் இனந்தெரியாத ஐவர் குழு

இனந்தெரியாத ஐவர் அடங்கிய ஆயுததாரிகளின் குழு ஒன்று நேற்று முன்தினம் இரவு அதாவது விழாழன் இரவு "சண்டே ரைம்ஸ்" இராணுவ செய்தியாளர் இக்பால் அத்தாஸ் வீட்டுக்குள் நுழைந்து கொலைப்பயமுறுத்தல் நடத்தியிருக்கிறது.

இக்பால் அத்தாஸ் தன்வீட்டில் இருந்தபோது அவரது வீட்டுக்குள் நுழைந்தநபர்கள் அவரது தலையில் துப்பாக்கியை வைத்து அழுத்தி அவ


(6 ஆம் பக்கம் பார்க்க)


## ஊழலை வெளிப்படுத்தியதே பயமுறுத்தலுக்குக் காரணம்

### அத்தாஸ்

இலங்கை பாதுகாப்புத் துறையின் ஊழல்களைத் தான் வெளிப்படுத்துவதாகவும், இதற்கும் இத் தாக்குதல் சம்பவத்திற்கும் தொடர்புகள் இருப்பதாகவும், இச் சம்பவங்களிற்கும் பாதுகாப்புத் துறைக்குமிடையே தொடர்புகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வீட்டின் கதவினை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த ஐவரில் ஒருவர் தன் தலையை நோக்கி துப்பாக்கியைப் பிடித்ததாகவும், இவர்கள் உள்ளே நுழைந்த வேளை தான், தன் மனைவி மற்றும் தன் பெண் குழந்தையுடன் மேல் மாடியில் நின்றதாகவும், தன்னை வற்புறுத்தி பலாத்காரமாக கீழே இறக்க முயற்சித்ததாகவும் தெரிவித்தார்.

தன்னை கீழே இறக்கி அடிக்க இவர்கள் திட்டமிட்டிருக்கலாமென்றும் தெரிவித்தார். இவ்வேளையில் ஏதோவொன்று அவர்களின் கவனத்தைத் திசை திருப்பியதால் அவர்கள் பின்வாங்கியதாகவும் பின்னர் தனதுவீட்டின் சுற்றாடலில் இவர்கள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## உடன் விசாரணை நடத்த அமெரிக்க குழு கோரிக்கை

பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் அமெரிக்க குழு கருத்துத் தெரிவிக்கையில் இச் சம்பவத்தைப் பற்றி இலங்கை அரசு உடனடியாக விசாரணை நடத்தவேண்டுமெனக் குரலெழுப்பியுள்ளது.

பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸை தொடர்ச்சியாகத் துன்புறுத்தவும் இம்சைப் படுத்தவும் முயற்சிக்கப்படுவதற்கும் அவர் இராணுவ விவகாரங்கள் பற்றி அடிக்கடி எழுதி வருவதற்கும் தொடர்புகள் இருக்கலாம் எனத்தெரிவித்துள்ளது

## தண்டிக்க ஜனாதிபதி உறுதி

இக்பால் அத்தாஸ் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைப் பயமுறுத்தல் பற்றி ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில் குற்றம் புரிந்தவர்கள் எப்பதவியில் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இத்தாக்குதலில் பங்கு பற்றியவர்கள் சாதாரண கிரிமினல்கள் அல்ல என்பதை அரசின் இவ் அறிவிப்பு சுட்டிக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சர் மங்கள சமரவீரா வன்மையாக கண்டிக்கிறார்

இக்பால் அத்தாஸ் மீதான கொலை முயற்சி குறித்து கருத்து வெளியிட்ட அரசு இச்சம்பவம் வெறுக்கத்தக்க ஒரு கொடிய செயல் என கண்டனம் வெளியிட்டுள்ளார் இப்படியான வஞ்சகச் செயல்கள் பழையசம்பவங்களாகவே இனி இருத்தல் வேண்டும். இது போன்ற சம்பவங்களை தடுத்து நிறுத்த அரசு உறுதி பூண்டுள்ளதென வெகுஜனத் தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

## தென் கொரியாவில் 1000 இலங்கையர் தவிப்பு

தென்கொரியாவில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கத்தினால் அந்நாட்டில் தொழில் புரியும் இலங்கையர் உட்பட ஆயிரக் கணக்கில் காணப்பட்ட வெளிநாட்டவர்கள் அனைவரையும் தொழில்புரியும் ஸ்தாபனத்தில் இருந்து தமது சொந்த நாடுகளுக்கு திரும்பிச் செல்லுமாறு அரசாங்கம் அவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அப்பணிப்புரையை மீறுவோருக்கு எதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது'

இலங்கையில் இருந்து அந்நாட்டிற்கு பணிபுரியச்சென்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு திடீரென அறிவிக்கப்பட்டமையால் இவர்கள் புகலிடம் இன்றித் தவிகத்துப் போயுள்ளார்கள் இன்னும் பத்துத் தினங்களுக்குள் இவர்கள் வெளியேறாது விடின் அந்நாட்டுப்பொலிஸார்இவர்களை கைதுசெய்ய ஆயத்தமாகிவிட்டார்கள்.

கொரிய நாட்டு இலங்கை தூதரகத்தின் அறிவிப்பின்


(6 ஆம் பக்கம் பார்க்க)


## 2001-ல் அவுஸ்திரேலியா குடியரசாக மாறும்

அவுஸ்திரேலிய அரசியல் சாசன மகா நாடு ஒன்று அவுஸ்திரேலியா குடியரசாக மாறுவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. இந்த விடயம் பற்றி அடுத்த ஆண்டுமக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படவுள்ளதாக அவுஸ்திரேலியப்பிரதமர் ஜோன் ஹவார்ட் தெரிவித்துள்ளார்.

இந்த வாக்கெடுப்பில் மக்கள் அங்கீகாரம் கிடைத்தால் 1-1-2001 அன்று அவுஸ்திரேலியா ஒரு குடியரசாக மாறக்கூடும் இதன் படி ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

ஜனாதிபதியை எவ்வாறு தெரிவுசெய்வது என்பது பற்றி அவுஸ்திரேலிய மக்கள் தீர்மானிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்என அரசியல் சாசன மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருநகரில் மோதல்

குருநகர்ப் பகுதியில் நேற்று அதிகாலை மோதல் சம்பவமொன்று இடம் பெற்றதாகத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வெடிச் சத்தங்களும் கேட்டன். எனினும் இது குறித்து விரிவான விபரங்கள் எதுவும் செய்தி அச்சுக் குப் போகும் வரை கிடைக்கவில்லை

# க. பொ. த. உயர்தர பரீட்சை முடிவு இன்று வெளியாகும்

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்றக.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகள் இன்று வெளியாகின்றன.

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும்உள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் இன்று பெற்றுக் கொள்ளலாமெனவும் ஏனைய பாடசாலைப் பரீட்சார்த்திகளினதும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் இன்று தபாலில் சேர்க்கப் டடுமெனவும், பரீட்சைஅணையாளர் எ.எம்.ஆர். டி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

## புதிய அதிபர்

யாழ்ப்பாணம் ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு திருமதி அனந்தநாயகி சண்முகானந்தன் நியமிக்கப் பட்டுள்ளார். தேசிய கல்வி நிறுவகபட்டப்பின் கல்வி டிப்ளோமா விரிவுரையாளராக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிப்பிரிவில் கடமையாற்றும் இவர் அல்லைப்பிட்டி சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி அண்மையில் மேற்படி வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்துள்ளார். (சி-1)

## கருத்தரங்கு

நாளை மாலை 3 மணிக்கு யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவ மண்டபத்தில் ஓவியம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடை பெறவுள்ளது.

## 175 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தென்பகுதி பழைய மாணவர் சங்கத்தினர் வெள்ளவத்தையில் தமிழ் விழா ஒன்றை நடத்தவுள்ளனர்.

இன்று பிற்பகல் 4.45 மணியளவில் வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் மேற்படி தமிழ் விழா நடைபெற உள்ளது.

# சம்பளமின்றி திண்டாடும் இ. போ. ச. ஊழியர்

எத்தனையோ இன்னல்களின் மத்தியில் கடமையாற்றும் யாழ். மாவட்ட இலங்கைப்போக்குவரத்து ஊழியர்களுக்குகடந்த 3 மாதச்சம்பளம் இதுவரை வழங்கப்படாதையிட்டுவிரக்தியடைந்துள்ளனர். பிறமாவட்டங்களுக்கு வழங்கப்படும் கஷ்டப்பிரதேசப்படி தங்களுக்கும் வழங்கப் படவேண்டுமெனவும் உரிய காலத்தில் தமது மாதாந்த வேதனம்வழங்கப்படவேண்டுமெனவும் கேட்கின்றனர்

# பாகிஸ்தான் அணி தங்கிய விடுதி மீது தாக்குதல்

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேற்று நடைபெறவிருந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கட் சுற்றுப் போட்டி பிற்போடப் பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிவீரர்கள் தங்கியிருந்த விடுதி மீது தீய சக்திகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதில் விடுதி தீப்பற்றியது.

இதனால் பாகிஸ்தான் அணிவீரர்கள் இருவர் காயமடைந்தனர். சக்குலின் முஸ்டாக் முகமட் அக்ரம் ஆகிய இருவருமே காயம் அடைந்தவர்களாவார்கள்.

இவர்கள் இருவரினதும் உடல் நிலை வளமைக்குத் திரும்புமிடத்து அச்சுற்றுப் போட்டி இன்று நடைபெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# விவசாயிகள் பிரச்சினைகள்

விவசாயிகள் ஒதுக்கப்படுகின்றார்கள் - ஓரம் கட்டப் படுகின்றார்கள், இந்த வேதனை நிலையால் மனம்குலைகிறார்கள் குமுறுகிறார்கள். எமக்கேன் பிரச்சனை- எமக்கேன் சோலி என்ற மனஒதுக்கத்தால் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்த பாடில்லைமாறாக வளர்கின்றது, இதனால் பாதிக்கப் படுபவன் விவசாயி வணிகர்களுக்கு சங்கம் வாகன உரிமையாளர்களுக்கு சங்கம் கடற்றொழிலாளர் களுக்கு சங்கம் ஆனால் விவசாயிகளுக்கு என்றொரு சங்கமில்லை உழைப்பு என்று ஓயாது உழைத்ததே மிச்சம் பலன் ஏதும் இல்லை -இதுதான்விவசாயி கண்டபலன்'

அதிகம் பீடிகை போட்டு எமது பிரச்சனையை சொல்லாது எழுதினால் உங்களுக்கு அலுக்கும் உள்ளமும் வெறுக்கும் ஆதலினால் பிரச்சினையை முன்வைக் கின்றேன். விவசாயிகளுக்கு மண்ணெண்ணை ஒதுக்கீடு இல்லை பல அரச அதிகாரிகளும் இவை தெரிந்தும் மௌனம் சாதிக்கின்றார்கள் ஆனால்மண்ணெண்ணையோ தட்டுப்பாடு இல்லாது கூடிய விலைக்கு தனியார் கடையில் தாராளமாக கிடைக்கின்றது. 1 லீ 22ரூபாயில் இருந்து 24வரை விலை போகின்றது கட்டுப்பாட்டு விலை 13.45 சதமான மண்ணெண்ணைவெளியில் 21-24 வரை ஏன்இந்த நிலை தட்டிக் கேளாதது குற்றமா? ஆமையாய் ஊமையாய்தலை கவிழ்ந்து தன் கடமையைச் செய்வது குற்றமா? காலம் தான் பதில் சொல்லவேண்டும்

வாகனங்களுக்கு எண்ணை ஒதுக்கீடு இருக்கின்றது குளிர்பான நிலையங்களுக்கு ஒதுக்கீடு இருக்கின்றது. தனியார் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு இருக்கின்றது' ஆனால் விவசாயிகளுக்கு எந்தவித ஒதுக்கீடும் இல்லை நாட்டுப் பிரச்சனையால் நொந்த விவசாயி தாழ்கின்றான். அவனை உயர்விக்க ஏதும் திட்டம் இல்லை பத்திரிகையிலே அழகான அறிக்கைகள் -கப்பலில் வெண்காயம் கொழும்புக்கு ஏற்றுமதி - ஜனவரி 500 மெ தொன் பெப்ரவரி 2500 மெ தொன் மார்ச் இப்படியாக இலக்கை போட்டு வெளுத்து வாங்குகின்றார்கள் ஏதோ விவசாய இணைப்புக்குழுகூட்டம்என்று யாழ்மாவட்ட அரச அதிபர்கள் கூடிக் கலைகின்றார்கள் நடப்பதெல்லாம் பூச்சியம் தான்,

இவைகளை ஏன் இவ்விடம் கூறுகின்றேன் என்றால் எல்லாம் ஏட்டளவில் தான்இதை எழுதும் போது ஒருபாட்டு நினைவு வருகின்றது.

''எங்கள் ஏரோட்டம்
நின்று போனால்
உங்கள் கார் ஓட்டம்
என்னவாகும் ''

பாட்டை நினைவு படுத்தி என்ன பார் எல்லாம் பெருமை படும் விவசாயம் யாழ் மாவட்டத்தில் சிறுமைப்படும் அவல நிலை என்று தீரும் என்று தீர்க்கப்படும் என்று விவசாயிகள் ஆதங்கப்படுகின்றார்கள்.

செயலக அறைகளிலும் விவசாய திணைக் களங்களிலும் புள்ளி விபரங்களை திரட்டி கொழும்பிற்கு அனுப்பும்அரச அதிகாரிகளுக்கு தள நிலமை தெரியாது - இப்படித்தான் நடக்கின்றது என்பது கொழும்பு அதிகாரிகளுக்கு தெரியாது ஆட்சியைப்பிடிக்க கூட்டம் போட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கும் தெரியாதா?எல்லாரும் விவசாயிகளை பகடைக்காயாய் நினைக்கிறார்கள் அவனது அடிப்படைத் தேவையை நிறைவேற்ற நினைப்பதில்லை அவனை ஒரு பொருட்டாக நினைப்ப தில்லை சாது மிரண்டால்காடுகொள்ளாது நீறுபூத்த நெருப்பாய் குமைந்து கொண்டுஇருக்கும் வேதனை- வெறுப்பு வெடிக்க முன்னர் பரிகாரம் காண்பது அனைத்து தரப்பினர் களின் கடமைஎன் பதை மறக்க வேண்டாம்.

எஸ். திருச்செல்வம்

## குடிநீருக்கு தட்டுப்பாடு

தீவகத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் குடிநீரின்றி பெரும் அவதிப்படுகின்றனர். பாடசாலைகளில் குடிநீர் கொள்கலன்கள் வைக்கப்பட்டு தேசியநீர்வழங்கல் சபையினால் உழவு இயந்திரமூலம் பாடசாலைகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்ற போதும், அடிக்கடி உழவுஇயந்திரம் பழுதடைவது உத்தியோகத்தரின் அசமந்தப் போக்கு என்பவற்றால் குடிநீர்விநியோகம் சீர்கேடடைந்துள்ளமை மாணவர்களைப் பெரிதும் பாதித்துள்ளது (சி-1)

## பண்ணிசைப்போட்டி பரீட்சை நிலைய மாற்றம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகார குழுவினரால் 14, 02. 98ம் திகதி சனிக்கிழமை யா/வட இந்து மகளிர் கல்லூரியில் நடாத்தப் படவிருந்தபண்ணிசைப் போட்டிக்கு போதுமான மாணவர்கள் விண்ணப்பிக்காத காரணத்தினால்குறித்த நிலையத்தில் நடைபெறவிருந்த மேற்படி போட்டி இரத்துச் செய்யப்படுகின்றது.

ஏற்கனவே விண்ணப்பித்த வடமராட்சி மாணவர்கள், 15.02.98ம் திகதி ஞாயிற்றுக் கிழமை யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் முற்பகல் 9.30மணிக்கு நடைபெறவுள்ள பண்ணிசைப் போட்டியில் பங்குபற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

எனவே விண்ணப்பித்த மாணவர்களை மேற்படி நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அதிபர்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## ஐம்பது ஆடை தயாரிப்பு நிலையங்கள்

புதுவருடத்திற்கு முன்னர் இலங்கையில் ஐம்பது ஆடை தயாரிப்பு நிலையம் நிறுவப் படவுள்ளது.

இவ் வருடத்திற்குள் 50 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்தொழிற் சாலைக்கு தேவையான மூலப் பொருட்களை பெறுவதற்கு சுலபமாக பெரிதான களஞ்சியம் ஒன்று கொழும்பில் கட்டப் படவுள்ளது.

இந்த தொழிற்சாலைநிறுவுவதால் அதிகப்படியான இலாபமும் பல இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்புக் களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று வர்த்தக உணவு அமைச்சரான கிங்ஸ்லி விக்கிரமரத்ன கூறியுள்ளார்.

## தியாகராசா ஓய்வு பெறுகிறார்

தீவுப்பகுதி தெற்கு வேலணையில் உதவி அரசாங்க அதிபராக கடமை யாற்றும் திரு ஆ' தியாகராசா அவர்கள் 25 2 98 தொடக்கம் தனது சேவையினின்றும் ஓய்வு பெறுகின்றார் தீவகத்தின் பல்வேறு அலுவலகங்களும் ஓய்வு பெற்றுச் செல்லும் அன்னாரின் சேவை தனைப் பாராட்ட விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.


எம். டி. ஆட்ஸ்

- உருவப்படங்கள்
- வர்ணச் சித்திரங்கள்
- விளம்பர போர்டுகள்
- லேஅவுட் டிசைன்
- பானர் அன்ட் கட் அவுட்
- இலக்கத் தகடுகள்

தரமான முறையில் செய்ய நாடுங்கள்

எம். டி. ஆட்ஸ்
13, டேவிற் றோட், யாழ்ப்பாணம்.



எமது வெளியீடுகள் விற்பனையாகிறது

செல்வி இ. இராசதுரையின் செயல் நூல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கணிதம் ஆண்டு | 1 | 40/- | தமிழ் ஆண்டு | 1 | 40/- |
| ,, ,, | 2 | 75/- | ,, ,, | 2 | 40/- |
| ,, ,, | 3 | 60/- | ,, ,, | 3 | 40/- |
| ,, ,, | 4 | 75/- | ,, ,, | 4 | 75/- |
| | | | நாமும் சுற்றாடலும் | 2 | 37/50 |

த. துரைசிங்கம் B. A (Hons) Dip in Ed, S.L.E.A.S.

| | | |
|---|---|---|
| சைவ நெறி ஆண்டு 2 | செயல் நூல் | 25/- |
| ,, ,, ,, 9 | வினாவிடை | 50/- |
| ,, ,, ,, 11 | ,, | 60/- |
| க. பொ. த. (உ/த) | திருக்குறள் பொருட்பால் | 50/- |
| ,, ,, | பாரதியார் கவிதைகள் | 30/- |
| ,, ,, | நாகம்மாள் | |
| | ஆர். ஷண்முகசுந்தரம் (நாவல்) | 55/- |

ஹிந்துஸ்தானி இசை
மேற்கத்திய இசையோர் அறிமுகம்
மீரா. வில்லவராயர் (எம். ஏ. கல்விடிப்ளோமா)

சங்கீத பட்டப்படிப்பு மாணவருக்கு பாடத்திட்டத்திற்கு அமைவானது
வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தகுந்த கழிவு கிடைக்கும்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்



கபிலா
காலணி அகம்

BATA
D.S.I
RANPA
SEEBA

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அனைத்து காலணி வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சூரியகாந்தி

## தப்புக் கணக்கு போடுகிறவர்கள்

''தீர்வுப் பொதி'' எந்த நிலையில் இருக்கறது?

அரச தரப்பு யோசனைகள் ''செசனல் பேப்பர்'' என்ற முறையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டன.

இன்னும் இந்த யோசனைகள் ''நகல் மசோதா'' வடிவத்தை எட்டவில்லை. நகல் மசோதா வடிவத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவும் இல்லை. தெரிவுக் குழுவும் ''மறுபடியும் கூடலாம்'' என்ற நிலையில் தான் உள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் இல்லாமல் தீர்வுப் பொதியை சட்டமாக்கவும் முடியாது.

நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு சம்மத வாக்கு அளித்த பின்னருங்கூட உடனே ''தீர்வுப் பொதி'' சட்டமாகிவிடாது.

அதற்குப் பின்னர் நாட்டு மக்களிடையே எடுக்கப்படும் கருத்துக் கணிப்பில் அது பெரும்பான்மை வாக்கைப் பெற வேண்டும். அப்போது தான் அது சட்டமாகும்.

செல்லவேண்டிய தூரம் இன்னும் நிறைய இருக்கிறது. தீர்வுப் பொதியை வைத்து அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சியைத் தூண்டிவிடலாம் என்ற யூ. என். பி யின் எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது.

தீர்வுப் பொதியை வைத்து யூ. என். பியை ஓரங்கட்டலாம் என்ற அரசாங்கத்தின் எதிர்பார்ப்பும் பொய்த்து விட்டது.

''சிங்கள கமிஷ'' னின் அறிக்கை அரசாங்கத்துக்கு பெருத்த தலையிடியைக் கொடுக்கும் என்று எதிர்பார்த்து மதில்மேல் பூனை போல் இருந்த பலருக்கும் பெருத்த ஏமாற்றம்!

'ஸ்ரீமான் சிங்கள பொதுஜனம்'' இனப் பிரச்சனைக்கு ஏதோ ஒரு தீர்வு வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்! ஆனால் அது எப்படிப்பட்ட தீர்வாக இருக்க வேண்டும் என்பதில் அவருக்கு அப்படியொன்றும் பாரதூரமான அபிப்பிராயம் எதுவும் இல்லை.

போர் முடிய வேண்டும், அமைதி வரவேண்டும், நாட்டில் நல்ல ஆட்சி வரவேண்டும், லஞ்சமும் ஊழலும் ஒழிய வேண்டும், வால் பிடிக்கும் அதிகார வர்க்கத்தின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வேண்டும் என்பன போன்றவை தான் ஸ்ரீமான் சிங்கள பொதுஜனத்தின் விருப்பங்களாக இருக்கின்றன.

''தீர்வுப் பொதி'' யை வைத்து அரசியல் லாபம் தேடலாம் என்று நினைக்கிற சிங்கள அரசியல் வாதிகள் தப்புக் கணக்குப் போடுகிறார்கள்!

தப்புக்கணக்குப் போடுகிறவர்கள் அங்கே மட்டுமல்ல இங்கேயும் இருக்கிறார்கள்.

## மலேரியா தடுப்பு இயக்கத்திற்கு பிரதேச வைத்திய அதிகாரி இல்லை

யாழ்ப்பாணத்திற்கு மலேரியா தடுப்பு இயக்கத்திற்கான பிரதேச வைத்திய அதிகாரி ஒருவரின் வெற்றிடம் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருப்பது குறித்து வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளது.

மலேரியாவின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் உச்சநிலை அடைந்துள்ள இந்த நேரத்தில் அரசாங்கம் இங்கு சேவை ஆற்றியவரை உடன் இடமாற்றம் செய்ததாகவும் எனவே இன்று இப்பதவிவெற்றிடம் உடன் நிரப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை சென்ற மலேரியா தடுப்பு இயக்கபிரதேச வைத்திய அதிகாரியாக இருந்த டாக்டர் எம்.எவ் என் மகீன் ஒக்டோபர் முதல் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

## ரெலோ பெயர் கொடுக்க தவறி விட்டது

வட்பகுதியில் உள்ளூரராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகளில் ரெலோ இயக்கம் தவிர ஏனைய கட்சிகள் அனைத்தும் உள்ளூராட்சி சபைகளிற்கான முதல்வர், பிரதி முதல்வர், தலைவர், உப தலைவர் ஆகியோரின் பெயர்ப்பட்டியல்களை சமர்ப்பித்துள்ளன.

பெயர்ப் பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த புதன் கிழமை பி.ப. 4.30 மணியுடன் முடிவடைந்துள்ளது.

தேர்தல் அதிகாரி உள்ளூராட்சி தலைவர்களின பெயர்ப்பட்டியலை சமர்ப்பிக்க தவறியமைக்காக ரெலோ அமைப்பிற்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளார் என தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்தது.

ரெலோ அமைப்பு வல்வெட்டித்துறை நகர சபையில் தேர்தலில் வெற்றிபெற்ற போதும் இந்த உள்ளூராட்சி சபையின் தலைவர் பதவிக்கான பெயர்ப் பட்டியலை சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

வட பகுதியில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் இம் மாதம் 18ம் தேதி ஆரம்பமாகும்.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் பெயர்ப்பட்டியல்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் ஏற்பாடுகளை செய்துள்ளது.

## ஜனாதிபதியுடன் கூட்டணி இன்னொரு சந்திப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி அதிகாரப் பரவலாக்கல் பற்றி அரசாங்கத்துடன் மற்றுமொரு பேச்சினை நடாத்தவுள்ளது.

மட்டக்களப்பு . திருகோணமலை மாவட்டங்களுக்குரிய உத்தேச சர்வஜன வாக்கெடுப்பு. மாகாண சபைகளை கலைத்தல் ஆகிய விவகாரங்கள் பற்றி இந்தக் கலந்துரையாடலின் போது முக்கியமாக ஆரயாப்படும்.

மேற்படி விடயத்தை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம் . சிவசிதம்பரம் தெரிவித்தார்.

## ரோந்து அணிமீது கிளைமோர் தாக்குதல்

புத்தூர் மேற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் படைவீரர் ஒருவர் பலியானார்.

ரோந்து சென்ற படையினரின் அணிமீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலிலேயே அவர் பலியானதாகத் தெரியவருகிறது.

## டொனால்ட் கணேஷகுமார் கிரிக்கட் போட்டி

மேற்படி போட்டி கடந்த வருடம் மழை காரணமாக இடைநிறுத்தப் பட்டமையால் ஓர் அரை இறுதிப் போட்டி முடிவடையவில்லை. இப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொனியன் விளையாட்டுக்கழக அணி மோதும். இப் போட்டி வி. எஸ். பி ஆதரவில் நடைபெறும்.

## கணக்காளர் குழு இந்தியாவுக்கு

ஆசிய அபிவிருத்தி வங்கியும் நிதிஅமைச்சும் இணைந்து வழங்கும் பல புலமைப் பரிசில்களில் கலந்துகொள்வதற்காக 30 பேர் அடங்கிய கணக்காளர் குழுவொன்று விரைவில் இந்தியாவுக்கு செல்லவுள்ளது.

இக் குழுவுக்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் பிரதமகணக்காளர் சு. சிவபாலனும் இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்கள பிரதம கணக்காளர் கா. வீரசிங்கமும் தலைமை தாங்கிச் செல்கின்றனர்.

## படங்களை வெளிநாட்டுக்கு அனுப்பியவர் யார்?

இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் பெண்புலி உறுப்பினர்களது நிர்வாணப் படங்களை வெளி நாடுகளுக்கு அனுப்பியவர் யார் என்பதைக் கம்பளைப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளதாகத் தெரியவருகிறது.

கம்பளை நகரில் பயணம் செய்து கொண்டிருந்த வாகனம் ஒன்றைச் சோதனையிட்டபோது, அதில் பயணம்செய்த தமிழ் நாட்டுக்காரரான ஒருவரிடம் இருந்து சில புகைப்படங்கள் கைப்பற்றப்பட்டன.

பெண் புலிகளின் நிர்வாணப்படங்களும் சில இராணுவ முகாம்களின் உள் அமைப்புகளைத் தெளிவாகக் காட்டுகின்ற படங்களும் இவர்களிடம் இருந்து கைப்பற்றியதாகக் கம்பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடம் இராணுவ முகாம்கள் தொடர்பான படங்கள் எப்படி வந்தன என்பதை இராணுவ உயர் தலைமைப் பீடத்திடம் பொலிஸார் விசாரிப்பதாகத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட தமிழ் நாட்டவர் உட்பட மூவர் மீதும் மேலும் விசாரணைகளை மேற்கொண்டபோது, அவர்கள் தாம் திருமண வைபவம் ஒன்றிற்கு வந்துள்ளதாகவும், வரும்போது எதுவித புகைப்படங்களையும் கொண்டு வரவில்லை என்றும், பஸ் ஒன்றில் தாம் பயணம் செய்தபோதே, இன்னொருவரால் கைவிடப்பட்ட நிலையில் அப்படங்கள் தம் கைக்குக் கிடைக்கப்பெற்றதாக அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் தந்த விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் மீளவும் இவ்விசாரணையை மேற்கொள்ளப் போவதாகவும் கம்பளைப் பொலிஸ் அதிகாரியான எல். வீரசேகர ''திவுமின'' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவினால் நடாத்தப்பட்ட தொண்டர்களுக்கான பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும். அத்துடன் சுகாதார வெளிக்கள பணியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் வைபவமும் நடைபெறும்.

இந்த செயற்பாடுகள் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் மாநகர சுகாதாரப் பகுதியினரால் நடாத்தப்படுகின்றன.

## மீளக் குடியமர்வு கொடுப்பனவு

(தெல்லிப்பழை)

மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவுரூபா5000/-வை ஐ பெற்றுக் கொள்வதில், தெல்லிப்பழைப் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் தற்காலிகமாக வசிப்பவர்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

''தங்களுடைய சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படாது இடம் பெயர்ந்த மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக இக் கொடுப்பனவான ரூ.5,000/- வழங்கப்படுவதற்கு வடக்கிற்கான மீளக்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபையின் தலைவர் இணங்கியுள்ளார்'' என யாழ். அரசாங்க அதிபர் திட்டப்பணிப்பாளருக்குப் பிரதிவிட்டு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளமைக்கு அமைய இக்கொடுப்பனவு தற்காலிகமாக வசிக்கின்ற பிரதேச செயலர் பிரிவில் வழங்கப்படலாம். ஆனால் வலி - வடக்கு பிரதேச செயலர் பிரிவின் குடும்பங்களுக்கு மட்டும் ஏன் இவை வழங்கப்படவில்லை? என்று எமது நிருபர் விசாரித்தபோது, ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள கிராம அலுவலர்கள் தங்களது பாதுகாப்புக் கருதி மேற்படி கொடுப்பனவு, அவர்களது நிரந்தரப்பிரிவில் வழங்கப்படவில்லை என உறுதிப்படுத்தும் கடிதத்தைப் பெற்று வருமாறு பணிக்கின்றனர் என்றும்,

ஆனால் மீளக்குடியமர் அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைத் தவிர்ந்த மீளக்குடியமர அனுமதிக்கப்படாத 30 கிராம அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு தங்கள் பிரிவில் தற்காலிகமாக வசிப்பவர்களுக்கு இக் கொடுப்பனவு ரூபா 5000/- எனது சிபார்சு இல்லாமலே மறு அறிவித்தல்வரை வழங்கலாம் என்பதை அறியத்தருகின்றேன் ''என்று வலி - வடக்கு பிரதேச செயலரால் 20-1-98ம் திகதிய கடித மூலம் எல்லாப் பிரதேச செயலருக்கும் வலி-வடக்கு பிரதேச செயலரால் கடிதம் அனுப்பப்பட்ட பின்னும்'' இப்பகுதி மக்களை மீண்டும் மீண்டும் அலைக்கழித்து இடர்ப்படுத்துவது மிகவும் வேதனைக்குரியதொன்றாகும் என இவ்விடயத்துடன் தொடர்புடையவர் மூலம் அறியக்கிடக்கிறது.

வன்னி செல்லவாவது

# எமக்கு அனுமதி வழங்குங்கள்

# தடை முகாமிலுள்ள மக்கள்

வவுனியா மகாவித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு பொலிசார் நெருக்குதல்களை அதிகரித்து வருகின்றனர். வன்னியில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படாத பகுதியில் இருந்து சென்றவர்களே இங்கு தங்கியுள்ளனர். இவர்களை வேறு இடங்களிற்கு அனுப்பி வைக்க அரச செயலகம் ஊடாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இங்கு தங்கி இருப்போருக்கு நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே வெளியே சென்று வர அனுமதி வழங்கப்படுகின்றது. பாடசாலை மாணவருக்கு கூட இப்போது பாடசாலை செல்ல அனுமதி அளிப்பது இல்லை. கடந்த இருபத்தேழாம் திகதி முதல் இவர்களுக்கு எந்த விதமான நிவாரண உதவியும் வழங்கப்படவில்லை பலபேர் பாவித்து அசுத்த நிலையில் உள்ள மலசல கூடங்களைக் கூட அரசுவேண்டும் என்றே திருத்தாமல் வைத்திருப்பதாக அங்கிருக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இருபத்தொரு வயதுடைய இளைஞர் ஒருவர் ''தம்மை இராணுவம் சர்வாதிகாரம் புரிந்து உழைத்து வாழமுடியாதவர்களாக ஆக்கி உள்ளனர்'' எனக் கூறி வேதனைப் பட்டுள்ளார். தன்னை மீண்டும் வன்னிக்கு அனுப்பி விடுமாறு அவர் அரச அதிகாரிகளைக் கேட்டுள்ளார். 'நம்பி வந்தோம். நாசமறுக்கப் படுகின்றோம்' என மக்கள் வாய்விட்டு கூறுகின்றனர் 64 வயதுடைய இளைப்பாறிய அரச ஊழியர் ஒருவர் வெளியே செல்ல அனுமதி கேட்டபோது அரச படைகள் அவரது திருமண அத்தாட்சி பத்திரத்தினைத் தருமாறு கேட்டு துன்புறுத்தி உள்ளனர் வவுனியா அரச அதிபர் பணிமனையில் உள்ள பெண் அதிகாரி ஒருவர் இடம் பெயர்ந்த மக்களை மிரட்டி அச்சுறுத்தி வருவதாக தெரியவருகின்றது.

## திருப்புரா கிராமங்கள் மீது போராளிகள் தாக்குதல்

பங்களாதேஷ் எல்லையோரமாக உள்ள திருப்புரா மாநிலத்தின் மேற்கு வட்டகையில் இருக்கும் ஆறுவங்காளக்கிராமங்களை பிரிவினைவாதக் கலகக்காரப் பழங்குடியினர் நள்ளிரவில் தாக்கியதாக திருப்புராவின் பொலிஸ் அதிகாரிகள் கூறினார்கள்.

பெருமளவிலான வீடுகளிற்கு அவர்கள் தீமூட்டினார்கள். அச்சம் கொண்ட வங்காளிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஓடியபோது கலகக்காரர்கள் அவர்களை நோக்கி தானியங்கித் துப்பாக்கிகளால் சுட்டார்கள். இதில் குறைந்தது 12பேர் கொல்லப்பட்டார்கள். 40 பேர் வரை காயமடைந்துள்ளனர். சிலர் மிக ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். சுமார் நூறு வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இதனிடையே இம்மாநிலத்தில நடந்த இருவேறு தாக்குதலில் 13 பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர். வரும் திங்கட் கிழமையன்று வரும் தேர்தலை முன்னிட்டு மாநில அரசு இராணுவத்தை வரவழைத்துள்ளது. வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் இராணுவம் கொடிகளை ஏந்தியவாறு அணிவகுத்துச் செல்கின்றது.

திருப்புராவின் இரண்டு முக்கிய கலகக் குழுக்களான அனைத்து திருப்புரா புலிப்படை மற்றும் திருப்புராவின் தேசிய விடுதலை முன்னணி ஆகியவை தேர்தல்கள் புறக்கணிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளன.

## மீண்டும் தொலைபேசி

யாழ். செயலகத்திற்கும் கொழும்புக்குமிடையிலான நேரடித் தொலை பேசிச் சேவை, பக்ஸ் என்பன நேற்று 12-ந் திகதி முதல் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன.

சில தினங்களாக இங்கிருந்து கொழும்புடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் செயலக அதிகாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழா

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 16ம் ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00மணியளவில், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி அவர்கள் தலைமையில் இராமநாதன் கல்லூரி முகப்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், விஞ்ஞான பீடாதிபதி அவர்களும், சிறப்பு விருந்தினராக திருமதி மலையரசி சிவராசா பி.ஏ. மருத்துவபீடம், அவர்களும் கலந்து கொள்கிறார்கள்.

வரவேற்புரையை திரு ஆறு-திருமுருகன் பி.ஏ அவர்களும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும் வாழ்த்துரையைதிருமதிஆ. சிவஞானசுந்தரம் பி. ஏ. அவர்களும் நன்றியுரையை திரு நா. தவநாதன் நிர்வாகச் செயலாளர் அவர்களும்நிகழ்த்துவார்கள்.

## டயானா ஹேடன்

உலக அழகு ராணி டயானா ஹேடன் இந்தியராகவிருந்தும் ஐரிஷ்காரரான மார்க் கோஹனைக் காதலித்து வருவது பத்திரிகைகளில் அடிபட்ட செய்தி.

அழகும், அறிவும், மனத்திடமும் உள்ளவரான டயானா ஹேடன் அயராத முயற்சியின் பின்பே கிரீடத்தை வென்றவர். அவரின் அழகை அதிகரிக்க பல வல்லுனர்கள் பின்னணியில் செயற்பட்டனர். செஷல்ஸ் தீவில் ஏனைய அழகிகளைத் தோற்கடித்துப் பட்டத்தையும், ஒரு இலட்சம் டொலர் பணத்தையும் பரிசாக வென்றவர். இவர் குழந்தைப் பராயத்தில் குடும்பக் கஷ்ட நிலை காரணமாக வீட்டை விட்டு வெளியேறினார். பின்னர் மொடலிங் துறையில் புகழீட்டி மிஸ் இந்தியாவாகி ஈற்றில் உலக அழகு ராணியாகவும் தெரிவானார். கடும் முயற்சியும் மனத்திடமும் அறிவும் ஒருவனுக்கு வெற்றியைத்தரும் என்பதற்கு இவர் ஒரு உதாரணம் - சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா வரிசையில் தற்போது டயானா ஹேடனும் சேர்ந்துள்ளார்.

கே. ஆர்

ஆங்கில மருந்துகள்
பால்மா வகைகள்
அழகு சாதனப் பொருட்கள்
ஆகியவற்றை ஒரே இடத்தில்
நிதான விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
ஓ. பி. டிக்கு எதிரில்
ஜெகன் பார்மஸி
JEGAN PHARMACY
Multi Shop Complex
462 /B, Hospital Road:
Jaffna.

சகல மோட்டார் வாகனங்களுக்கும் உரிய
உதிரிப்பாகங்களும் மற்றும்
மோட்டார் சைக்கிள் உதிரிப்
பாகங்கள் இந்தியாவில்
இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட
மாருதி - 10.H.P டீசல்
12.H.P
சக்திவான் - 16.H.P என்ஜின்கள்
நிதான விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
NEW SUBAMALA MOTORS
புதிய சுபமாலா மோட்டோர்ஸ்
79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 'தினத்தந்தி' ஆதித்தன் 'குமுதம்' அண்ணாமலை

# சாதனை செய்த பத்திரிகையாளர்!

- ''சுகுமாரன்'

''ஒரு பத்திரிகையின் புகழுக்கும் விற்பனைக்கும் காரணம் என்ன?''

இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் பரம ரகசியம்!

பதில்கள் 'கல்கி' கிருஷ்ணமூர்த்திக்கும், 'தினத்தந்தி' ஆதித்தனுக்கும், 'குமுதம்' எஸ். ஏ.பி. அண்ணாமலைக்கும், தெரிந்தது மாதிரி தமிழ்ப் பத்திரிகை உலகில் வேறு யாருக்கும் தெரிந்திருக்கவில்லை!

மூன்று பேருமே அபாரமான சாதனை செய்த பத்திரிகையாளர்கள்! புதுப் பத்திரிகை தொடங்கி வெற்றி கண்டவர்கள் பல லட்சக் கணக்கான வாசகர்களையுடைய பத்திரிகைகளாக தங்கள் பத்திரிகையை வளர்த்தவர்கள்!

'கல்கி' யும் 'தினத்தந்தி' யும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் தொடக்கப்பட்டன.

நாற்பதுகளின் முற்பகுதியில்.

'குமுதம்' இதற்குப் பின்னால், ஒரு ஐந்து ஆறு ஆண்டுகள் கழித்து, 47இல் தொடக்கப்பட்டது.

'கல்கி' தொடங்கிய உடனேயே கொடிகட்டிப் பறந்தது. 'தினத்தந்தி' யும் 'குமுத'மும் தொடக்கத்தில் விழுந்தன. பல லட்சம் ரூபாய்களை விழுங்கின. பின் நிமிர்ந்து நின்று சாதனை புரிந்தன!

### போராட்டத்தில் ஆர்வம்! ராஜாஜிமீது பக்தி!

கல்கி, ஆனந்தவிகடனில் ஆசிரியராக இருந்தவர். அதனை மிக வெற்றிகரமாக நடத்தியவர். பின்னர் அதை விட்டு விலகி சொந்தப் பத்திரிகை தொடங்கினார்.

ஆதித்தனுக்கு ரிப்போர்ட்டராக இருந்த அனுபவமும், கட்டுரைகள் எழுதிய அனுபவமும் இருந்தது.

'தந்தி' தொடங்குவதற்கு ஒரு ஆறுமாதம் முன்னால் 'தமிழன்' என்ற ஒரு வாரப் பத்திரிகையையும் வெளியிட்டார். பின்னர் தினசரிப் பத்திரிகை தொடங்க ஆசைப் பட்டு 'தந்தி' யை தொடங்கினார்.

எஸ். ஏ. பி. அண்ணாமலை சட்டக்கல்லூரி படிப்பு முடிந்து வெளிவந்தவுடன் பத்திரிகைத் தொழிலை விரும்பி 'குமுதம்' இதழைத் தொடங்கினார்.

கல்கிக்குக் படித்து கொண்டிருந்த காலத்திலேயே காந்திஜி மீது அபாரமான பற்றுதல் ஏற்பட்டது. சுதந்திரப் போராட்டத்திலும் ஆர்வம் பிறந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் நாட்டுத் தலைவரான ராஜாஜி மீது பக்தியே பிறந்தது!

பட்டப் படிப்பைப் பாதியிலேயே விட்டார்.

தீவிரமாக அரசியலிலும், எழுத்துத் துறையிலும் பிரவேசித்தார்.

சமூக முன்னேற்றத்துக்கான விஷயங்களில் அவருக்கு எப்போதுமே ஆர்வம் இருந்தது.

தமிழ் மக்களிடையே தேசபக்தியைவளர்ப்பதும், தமிழ்ப் பற்றை வளர்ப்பதும் அவர் நோக்கமாக இருந்தது.

### தினத்தந்தி, குமுதம் விற்பனையில் சாதனை

எழுத்தாளன் என்ற முறையில் ஆதித்தன் அண்ணாமலை ஆகியோரைக் காட்டிலும் கல்கி சாதித்தது அதிகம்!

பத்திரிகை விற்பனையைப் பெருக்கியவர்கள் என்ற முறையில் ஆதித்தனும் அண்ணாமலையும் தனிரகம்!

இந்திய மொழிப் பத்திரிகைகளிலேயே அதிகமாக விற்பனையாகும் நாளிதழ் 'தினத்தந்தி'¿

'தினத்தந்தி' யைவிட பல லட்சம் பிரதிகள் அதிகமாக விற்பனையாகும் பத்திரிகை 'குமுதம்'!

ஆனால் 'குமுதம்' வார இதழ்!

### குமுதத்தை தொடங்கிய போது வயது 23

'குமுதம்' எஸ்.ஏ.பி. அண்ணாமலை மிகப்பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

நாட்டுக் கோட்டைச் செட்டியார் சமூகம்.

தந்தையும், பாட்டனும் தேடிய சொத்து நிறைய இருந்தது.

பரம்பரையாகப் பணக்காரக் குடும்பம்.

அண்ணாமலை செல்லப் பிள்ளை.

ஒழுங்காகப் படித்து எம்.ஏ, பி. எல் பட்டங்களைப் பெற்றவர்;

பத்திரிகைத் துறைக்கு வருமுன் இரண்டொரு சிறுகதைகளை எழுதிப் பார்த்தார்.

'பிரசண்ட விகடன்' முதலிய பத்திரிகைகளில் அவை பிரசுரமாயின!

படிப்பு முடிந்தவுடன் முன் அனுபவம் எதுவுமின்றி நேரடியாகவே பத்திரிகைத் தொழிலுக்கு வந்துவிட்டார்.

'குமுத'த்தை தொடங்கிய போது அவருக்கு வயது 23.

பத்திரிகை படிக்கிறவர்களிடையே அந்த நாட்களில் கல்கி ஏற்படுத்திய அபரிமிதமான ஆர்வம் பலமானது!

'குமுதம்' கூட 'கல்கி'யின் வெற்றியையும், புகழையும் கண்ட உந்துதலினால் தொடக்கப்பட்டது தான்!

### 'விகட'னை வளர்த்த கல்கி

'ஆனந்தவிகடன்' ஆசிரியராக இருந்தபோதே கல்கி தனது சாதனைகளை நிலை நாட்டத் தொடங்கியிருந்தார்.

எழுத்தாளர்களும், வாசகர்களும், அரசியல்வாதிகளும் பிரமித்துப் போற்றும் அளவுக்கு 'ஆனந்தவிகட'னில் இருந்தபோதே கல்கியின் எழுத்தாற்றல் வெளிப்பட்டது,

கல்கி பணியாற்றத் தொடங்கியவுடனேயே 'விகடன்' வித்தியாசமான முறையில் வெளிவரத் தொடங்கியிருந்தது.

படங்கள்வெளியிட்ட முதல் தமிழ்ப் பத்திரிகை 'விகடன்'!

கார்ட்டூனும் நகைச்சுவைத் துணுக்குகளும் அதன் விசேஷ அம்சங்கள்!

கல்கியின் 'கள்வனின் காதலி', 'தியாகபூமி' முதலிய தொடர்கதைகள் 'விகட'னில் வெளியானபோது பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் அதனை விழுந்து விழுந்து படித்தார்கள்.

நிறையப் பெண்களும் விரும்பிப் படித்தார்கள்.

பெண்களிடையே கதை படிக்கும் பழக்கத்தை வளர்த்தவர் கல்கிதான்!

சுமார் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த அவர் கதைகளில் பல புரட்சிகரமான முற்போக்குக் கருத்துக்கள், இன்றைக்கும் தேவையான கருத்துக்கள் இருந்தன!

(தொடரும்)

# தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவு

சம்பள உயர்வு கோரி பெருந் தோட்டத் தொழிலாளர்களினால் கடந்த ஒன்பது நாட்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த வேலை நிறுத்தம் நேற்றுடன் கைவிடப்பட்டது.

நேற்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவுடன் பெருந்தோட்ட வேலை கொள்வோர் சம்மேளனமும், தோட்டத் தொழிலாளர் சங்கமும் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்தே வேலை நிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது,

தமது நாளாந்த சம்பளத்தை நூற்றிஐந்து ரூபாவாக அதிகரிக்க வேண்டுமெனக்கோரி தொழிற் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தில் சுமார் ஐந்து லட்சம் தொழிலாளர்கள் பங்கேற்றனர். இதனால் பெருந்தோட்ட வேலைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன.

இது விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டதன் மூலம் நாளொன்றுக்கு நூற்றி ஒரு ரூபாவைச் சம்பளமாக வழங்க சம்மதித்ததன்பேரில் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. இன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவர்.

## 4 புலிகள் களப்பலி

கடந்த பத்தாம் திகதி மன்னன்குளம் பகுதியில் இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக புலிகளின் குரல் தெரிவித்தது.

2 ம் லெப்டினன்ட் வெண்ணிலா (மாணிக்கராசா மாலதி) திருகோணமலை லெப்டினன்ட் சீமா வேலுப்பிள்ளைசரோஜினிதேவி மட்டக்களப்பு

லெப்டினன்ட் பரிமளா மார்க்கண்டு குமுதினி யாழ்ப்பாணம் இதே வேளை நேற்று முன் தினம் மூன்று முறிப்பில் இடம்பெற்ற மோதலில் வீர்வேங்கை இசைநிலா (பொன்னம்பலம் செண்பகவல்லி)கண்டி. ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

## வைத்தியசாலைஊழியர்கள் பெரும் நெருக்கடியில்

மல்லாவி மருத்துவ மனையில் பணிபுரிந்துவருகின்ற இடம்பெயர்ந்த, பணியாளர்கள் தங்களுக்கு முழு ஊதியம் இன்னமும் வழங்கப்படவில்லை எனக் கூறியுள்ளனர்.

மருத்துவப் பணியாளர்கள் பற்றாக்குறையான இப்பகுதியில் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி உரிய வேதனத்தைப் பெற்றுக்கொடுக்க வன்னி மாவட்ட சுகாதார பணிமனை தவறிவிட்டது, இதன் விளைவால் அவ் வைத்தியசாலை பணியாளர்கள் பெரும்நெருக்கடியைச் சந்தித்துவருகின்றனர்.

## மூத்தகணக்காளருக்கு உயர்பதவி மறுப்பு

கணக்காளர் சேவையில் மூத்த அதிகாரியும் யாழ். செயலகத்தில் பல வருடங்கள் பிரதம கணக்காளராகவும் பணியாற்றிய திரு. சுவாமிநாதன் சிவபாலனுக்கு தமிழர் என்ற முறையில் திறைசேரியிலுள்ள உயர் பதவியொன்று மறுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இவருக்கு இம்மாதம் 1-2-98 ம் திகதி முதல் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத் துறை அமைச்சில் பிரதம கணக்காளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

திறைசேரியில் இவருக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வு இடத்திற்கு இவரிலும் மூப்பில் குறைந்த ஒருவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

## பாதுகாப்பரண்கள் புதுப்பிக்கப்படுகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவமும் இராணுவத்துடன் இணைந்து செயலாற்றும் தமிழ்க்குழுக்களும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து அதற்கான எதிர்த்தாக்குதலைத் தொடுக்கக்கூடியவகையில் பின் அரண்களைஅமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக முழுமையான பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் விடுதலைப்புலிகள், இராணுவத்தின் மீதும் இணைந்து செயலாற்றும் தமிழ்க் குழுக்கள் மீதும்திடீர்த்தாக்குதலில் மட்டக்களப்பில் ஈடுபடலாம் என்ற அடிப்படையில் இப்பாதுகப்பு உசார் படுத்தப்பட்டுள்ளது.

## தென்மராட்சியில் எரிபொருளுக்கும் பெர்மிட்

இராணுவ இணைப்பதிகாரியின் பணிப்பையடுத்து தென்மராட்சிப்பிரதேசபகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ''பெர்மிட்'' இல்லாதோரது வாகனங்களிற்கு எரிபொருள் வழங்குவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனால் தென்மராட்சிப் பகுதிக்கு பிரயாணம் செய்யும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள் மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதனிடையே எரிபொருள் நிரப்புநிலையங்களிற்கு அருகிலுள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களில் கூடிய விலையில் தங்குதடை ஏதுமின்றி எரிபொருட்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஓவியக் கண்காட்சி

ஆசை இராசையாவின் ''விம்பம்'' ஓவியக்கண்காட்சி இன்றும், நாளையும், நாளை மறுதினமும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10-00 மணி முதல் மாலை 4-00மணிவரை இக் கண்காட்சிநடைபெறும் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையும் கலைவட்டமும் இணைந்து இக்கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளன.

## இரத்தினம் புதிய உதவி அரச அதிபர்

நல்லூர் பிரதேச அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்ற திரு. செ. இரத்தினம் அவர்கள் 25 2 98 தொடக்கம் தீவுப் பகுதி தெற்கு வேலணைக்கு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## விளம்பர நங்கை

தென் கொரியாவில் தொலைக் காட்சி விளம்பரங்களில் அதிக தடவை தோன்றியவர் என்ற பெருமையைப் பெறுபவர் கிம் ஜீ ஹோ என்ற 24 வயதுடைய அழகிய மாணவி.

பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டே விளம்பரக் காட்சிகளிலும் கவர்ச்சி காட்டி நடிப்பவர். சராசரியாக வாராந்தம் 500 தடவைகளுக்கு மேல் தென் கொரிய தொலைக் காட்சியில் தோன்றி கார், குளிர்சாதனைப் பெட்டி, அப்பிள் யூஸ் ஆடைகளை விளம்பரப் படுத்துவதோடு தென்கொரியர்களையும் கவர்ந்து வருகின்றார்.

அழகான முகமும் கட்டுடலும் இவருடைய மூலதனம். இவருடைய வருமானமோ பல இலட்சம் டொலர்! இவருக்கும் உற்பத்தி நிறுவனங்களுக்கும் வருமானம் குவிகின்றது.

---

எழுத்தாளர்

## ஜெயகாந்தன்

சொல்கிறார்

''சம்பாதிப்பதற்கு எழுத்தைப் பயன்படுத்தக் கூடாது''

''சுதந்திரத்துக்குப் பிறகு நிறையப்பேர் எழுத வந்ததே, பணம் வருமே என்பதற்காகத்தானே,

நான் எழுதுவதை விட்டதே ''எழுதிச் சம்பாதிப்பதா?'' என்ற எண்ணத்தில்தான்!

பணம் சம்பாதிக்க வேண்டுமென்றிருந்தால் நான் அரசியலிலேயே இருந்திருக்கலாம். ஒருவகையில் பணம் பண்ணுவதற்காகக்கூட எழுதலாம்.

ஆனால் -

பகைமையை வளர்க்க எழுதக்கூடாது. கதையில் வருகிற பாத்திரம் வேண்டுமானால் கத்தி வைத்திருக்கலாம். ஆனால் ''கத்தி எடு'' என்று ஒரு எழுத்தாளன் எப்போதும் எழுதக்கூடாது''

— சென்னை புத்தகக் கண்காட்சிக் கருத்தரங்கில் ''இப்போதைய எழுத்துலகம்'' பற்றிப் பேசும்போது எழுத்தாளர் ''ஜெயகாந்தன்'' இவ்வாறு குறிப்பிட்டார்.

## அரச சார்பற்ற இணையம் வலி வடக்கிற்கு விஜயம்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் எதிர்வரும் 22ம் திகதி வலி வடக்குப் பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் பதினைந்து பிரதி நிதிகள் இக் குழுவில் அடங்குவார்கள். இதற்கான ஏற்பாடுகளை வலிவடக்கு அபிவிருத்திச் சபையும் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து மேற்கொள்ளுகின்றன.

வலி வடக்கு அபிவிருத்தி தொடர்பாகவும் மக்கள் மீளவசிப்பதற்குத் தடையாக இருக்கும் அசாதாரண காரணங்களைக் கண்டறியும் முகமாக இவ் விஜயம் மேற்கொள்ளப்படுகின்றது,

## தம்பலகாமத்தில் ஆர்ப்பாட்டம்

கடந்த மாதம் முப்பத்தோராம் திகதி தம்பலகாமத்தில் எட்டுத் தமிழர்கள் பொலிசாராலும் ஊர்காவல் படையினராலும் கொல்லப்பட்டதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் இன்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தவுள்ளனர்.

இப்படுகொலைக்குக் காரணமான மூன்று காவலரண்களையும் அகற்றச் சொல்லியே இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

## கடத்தப்பட இருந்த பொருட்கள் பறிமுதல்

மிருசுவில் பகுதியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளிற்கு கடத்தப்படவிருந்த ஒருதொகுதிதடைசெய்யப்பட்டபொருட்களை இராணுவத்தினர் கைப்பற்றினர்.

இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் கொள்வனவு செய்யப்பட்ட ஆயிரம் பற்றிகள் மற்றும் ஒரு தொகுதி துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் மாட்டு வண்டியொன்றின் இருக்கை ஆசனப்பலகைகளிற்கிடையே உருமறைத்து வைக்கப்பட்ட நிலையில் எல்லைச்சோதனைக் காவலரணருகில் கண்டு பிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது.

பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் விசாரணையைத் தொடர்ந்து பறிமுதல்செய்யப் பட்டதுடன் வண்டிலும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## பனம் பொருள் கண்காட்சி

சுதந்திரதினப் பொன்விழாவை முன்னிட்டு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுவரும் கண்காட்சியில் பனம்பொருள் உற்பத்திக் கண்காட்சி மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்த பனம்பழ தயாரிப்புக்களான பற்பசை சம்போ ,வைன், பவுடா போன்றவை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இத்தகைய பொருட்களுக்கு மக்கள் மத்தியில் அதிகளவு கிராக்கி இருப்பதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எஸ். பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

## செம்மணி வீதி விரைவில் திறந்து விடப்படும்

பொதுமக்களின் பாவனைக்கு தடைசெய்யப்பட்டுள்ள செம்மணி வீதி விரைவில் மீளத்திறந்துவைக்கப்படவுள்ளது சூரியப்பிரகாச இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பொதுமக்களின் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டிருந்த செம்மணி வீதி தற்போது திறந்துவிடப்படவுள்ளது

இராணுவத்தினர் வீதித்தடைகளை அகற்றி பதைதகளை துப்பரவு செய்து வழங்கியதையடுத்து, வீதி திருத்தவேலைகள் தற்போது நடைப்பெற்றுவருகின்றது. நாயன்மார் கட்டு சந்தி- நாவற்குழி சந்திவரையான பகுதிகள் திருத்தம் செய்த பின்னர் மக்கள் பாவனைக்கு பாதை திறந்து விடப்படும் என எதிர்பார்க்கபடுகிறது.

## விஜயகுமாரதுங்கவின் பத்தாவது நினைவு தினம்

பிரபல நடிகரும் அரசியல் வாதியுமான விஜயகுமாரதுங்காவின் பத்தாவது சிரார்த்த தினம் இம்மாதம் 16ம் திகதி நடைபெறவுள்ளது. இதையொட்டி இவரின் திரைப் படங்கள் குருநாகல் படமாளிகையில் திரைபிடப்படவுள்ளன.

இலங்கை இனப்பிரச்சனை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படவேண்டு மென்பதில் விஜயகுமாரதுங்கா உறுதியாக இருந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## படையினரின் சடலங்கள் வவுனியாவில் புதைப்பு

(வவுனியா)

கிளிநொச்சி இராணுவத் தளம்மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்ட போது கைப்பற்றி செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக ஒப்படைத்த சடலங்களைஇராணுவத்தினர் வவுனியாவிலேயே புதைக்கப்பட்டு விட்டதாக புலிகளின் குரல் வானொலி தெரிவிக்கின்றது.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நாற்பத்தியொரு சடலங்களை அவர்கள் உறவினருக்கு ஒப்படைத்தால் தகவல்கள்பரவிவிடும்என்ற காரணத்தினால் இந்த நடவடிக்கையில் இராணுவம் இறங்கியதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

# பகிடிவதை காரணமாக ஆசிரியர் வைத்தியசாலையில் அனுமதி

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை புதுமுக ஆசிரியர்கள் மீது நடாத்தப்பட்ட பகிடிவதைகளின் போது மோசமாக உடல் நிலை பாதிப்புற்ற நிலையில் ஆசிரியரொருவர் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணவர்களிற்கு நல்லதைப் போதிக்க வேண்டிய ஆசிரியர்களே, இப்படிப் போனால் மாணவர்கள் எப்படி நற்பிரஜைகளாவது? என பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## விமானங்கள் மூலம் துவிச்சக்கர வண்டி இறக்குமதி

யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கர வண்டிகளிற்கு திடீரென ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் கிராக்கியினையடுத்து தனியார் வர்த்தகர் ஒருவர் ஒரு தொகுதி துவிச்சக்கர் வண்டிகளை விமான மூலம் தருவித்துள்ளார்,

துவிச்சக்கரவண்டிகள் உதிரிப்பாகங்களாக்கப்பட்டு பொதிகளாக்கப் பட்டு ஒவ்வொரு பொதிக்கும் ரூபா எண்ணூறு சரக்குவிமானக் கட்டணமாக செலுத்தப் பட்டு துவிச்சக்கர வண்டிகள் எடுத்துவரப் பட்டுள்ளன

## முதிர்ந்த காப்புறுதிகளுக்கு பணம் மீளளிப்பு

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் ஆயுள் காப்புறுதி முதிர்வை அடைந்தவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு கொழும்பில்இருந்து ஒரு தொகைப் பணம் எடுத்துவரப்பட்டுள்ளதாக காப்புறுதிக்கூட்டுத்தாபனயாழ்கிளை அதிகாரி ஒருவர் சூரியகாந்திக்குத் தெரிவித்தார்.

நீண்ட காலமாக முதிர்வைக் கொண்ட பத்திரங்களுக்குஅதற்குரி யபணம்வழங்கப் படவில்லையென்ற புகாரை உரியவர்கள் கவனத்திற்கெடுத்து நிதியினை விடுவித்துள்ளதாக தெரியவருகிறது.

## காவலரண்களுக்கிடையே புதிய புதிய சட்டதிட்டங்கள்

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ பொலீஸ் சோதனைச் சாவடிகளில் அனேகமாக பாடசாலை மாணவர்கள் துவிச்சக்கர வண்டியில் ஓடிப்போவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பிரதான வீதி பரி. யோவான் கல்லூரிக்கும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கும் இடையே உள்ள இராணுவ பொலீஸ் காவலரணில்மட்டும் பாடசாலை மாணவ, மாணவிகளை துவிச்சக்கர வண்டி உருட்டி செல்ல வேண்டும் என படையினர் வற்புறுத்தி வருகின்றனர்.

எல்லா காவல் அரணிலும்' சோதனைச்சாவடியிலும் ஓடி வரும் மாணவர்கள் இதிலும் சற்று அசட்டையாக இருந்தால் பாவம் இவர்களுக்கும் தடிஅடி ஏற்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

## ஐ. தே. கவின் மாற்றுத் திட்டம் மார்ச் 15ற்கு பின்

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதிப் பிரேரணை மார்ச் மாதத்திற்கு முன் சமர்ப்பிப்பதுசாத்தியமில்லை எனத் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இப் பிரேரணை குறித்து ஆழமாகவும், விரிவாகவும் ஆராய வேண்டியுள்ளதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவினதும் செயற் குழுவினதும் அங்கீகாரத்தைப் பெறவேண்டியுள்ளதெனவும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உத்தேச அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.


அசல் 22 கரட் தங்கத்தில்
குறித்த தவணையில்
எண்ணற்ற வண்ண
டிசைன்களாக நகைகளைப்
பெற்றிட

லலிதா ஜுவல்லறி

புத்தம் புதிய டிசைன்களில்
நீங்கள் விரும்பிய நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து பெற்றிட

யாழ் நகரில் என்றும்
நாட வேண்டிய ஸ்தாபனம்

லலிதா ஜுவல்லறி
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## செயலக வளவில் மேலும் மிதிவெடிகள்

யாழ். செயலக வளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியொன்று செயலக ஊழியர்களால் நேற்று கண்டு பிடிக்கப்பட்டது' அதனைத் தொடர்ந்துபாதுகாப் புப்பிரிவினருக்குஉடனடியாகதகவல் அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து ''குண்டுசெயலிழப்பு'' பிரிவினர் மிதிவெடிகளை செயலிழக்கச் செய்து எடுத்து சென்றுவிட்டதாக செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்,

## சீமெந்திற்கு தட்டுப்பாடு

கொழும்பிலிருந்து கப்பல்கள் மூலம் அண்மையில் சீமெந்து எடுத்துவரப்படாமையைத் தொடர்ந்து நகரில் சீமெந்தின் விலை அதிகரித்துள்ளது.

முன்னர் ரூபா 475 ஆக விற்கப்பட்ட சீமெந்தினை தற்போது ரூபா 650 விலையில் கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதுடன் அதுவும் வரையறுக்கப்பட்ட அளவிலேயே வழங்கப் படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபன யாழ் கிளையினர் வரையறுத்த அளவில் பெர்மிட்களுக்கு சீமெந்தினை விநியோகித்து வருகின்றனர்.

## ஆட்லறித்தளம் சேதம்

கிளிநொச்சிப் படைத் தள தாக்குதலைத் தொடர்ந்து இயக்கச்சி 'ஆட்லறி' தளம் மீது கரும்புலிகள் தாக்குதலை நடத்தியபோது இராணுவ அணியொன்றுடன் மோதல் ஏற்பட்டுள்ளது.

இருந்த போதும் 'ஆட்லறி' தளத்திற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக 'புலிகளின் குரல்' தெரிவிக்கின்றது.

## கலாசூரிக்கு விருது

இங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழச்சேவைகள் பணிப்பாளர் கலாசூரி ஸ்ரீரங்கநாதனுக்கு இந்திய தூதுவராலயத்தால் விருது ஒன்றுவழங்கப்பட்டுள்ளது.

கலைத்துறைக்கு அவர் ஆற்றிவரும் யணிக்காகவே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## தென்..

படி இவ்வாறு வெளியேற்றப் பட்ட ஊழியர்களுக்கு எவ்வித நஷ்டஈடோ எவ்வித கொடுப்பனவோ வழங்கப்படவில்லை என்த் தெரியவருகின்றது.

## கொலைப்...

ரைக்கொலை செய்யப்போவதாகப்பயமுறுத்தியிருக்கிறார்கள்.

''சந்தேசய,', ''தமிழோசை''ஆகிய வானொலிப் பேட்டிகளில் தனக்கு நேர்ந்த கொலைப்பயமுறுத்தல் பற்றி இக்பால் அத்தாஸ் நேரடியாகத்தகவல்தந்திருக்கிறார்.

# கி. நொச்சிக்கு செய்தியாளர் விரும்பினால் வரலாம்

கிளிநொச்சி நகரை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாக விடுதலைப்புலிகள் தெரிவிக்கும் கருத்தில் எந்தவித உண்மையும் இல்லை என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்-

நேற்று மாலை பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்திய நடைபெற்ற பத்திரிகையாளர் மநாட்டின் போது அவர் இக்கருத்தை தெரிவித்தார் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் தென்பகுதியில் இருக்கும் பகுதி மீது தாக்குதல் நடத்தில் விடுதலைப் புலிகளை முழுமையாக அப்பகுதியில் இருந்து வெளியேற்றிவிட்டதாகவும் கிளிநொச்சி நகர் எவர் கைகளிலும் வீழ்ந்துவிடவில்லை செய்தியாளர்களுக்கு அவசியமானால் நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கு அழைத்து செல்லதயார் என அமைச்சர் தெரிவித்துள்ளார்

# தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரப் போர்

இந்தியத்தேர்தலில் தமிழ் நாட்டில் தி.மு.க. கூட்டணிக்கும், அ.தி.மு.க. கூட்டணிககிம் இடையில் உச்சமான போட்டி நிலவுகிறது.

தி.மு. கவுடன் மூப்பனார் தலைமையிலானதமிழ்மாநில காங்கிரஸ் இணைந்து அசுர வேக்த்தில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை அ.தி.மு,க. வுட்ன் பாரதிய ஜனதாக் கட்சி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் என்பன இணைந்து தி.மு.க.கூட்டணியின் பிரச்சாரத்திற்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் பிரசாரத் தந்திரங்கைப் பயன்படுத்தி வருகின்றனர்

இப்பிரச்சாரக் கூட்டங்களில் நடிகர்களின் பங்களிப்பும் கணிசமாகவுள்ளது.

# மர்மக் கப்பல் இந்தியகடற்படை தேடுகிறது

வங்காள விரிகுடாக்கடலில் சென்ற புதன்கிழமை கைப்பற்றப்பட்ட ஆயுதக் கப்பலில் இருந்த கடத்தல்காரர்கள் கப்பலில் இருந்த ஆயுங்களை நாட்டின் தெற்கேயுள்ள அந்தமான் தீவுகளின் கடற்கரை ஓரமாக இறக்கி விட தீர்மானித்திருந்ததாக விசாரணைகளின்போகு தெரிவித்துள்ளார்கள். கப்பல் மீதானமோதலில் இறந்து போன அறுவர் தவிர்ந்த மீதி எழுபத்திநான்கு பேரில் பலர் தாய்லாந்து பர்மா நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

அந்தமானின் வெகு தூரமொன்றிலுள்ள தீவு ஒன்றின் சிறிய துறைமுகத்தில் ஆயுதங்களை இறக்கிவிடத் திட்டமிருந்ததாகவும், இறக்கப்பட்ட பின் இவ்வாயுதங்கள் சிறிய மீன்பிடி படகுகள் மூலம் பங்களாதேஷ்-பர்மா எல்லையோரத்தில் இறக்க திட்டமிட்டதாகவும், அங்கிருந்து இந்தியாவின் வட-கிழக்குப் பகுதியிலுள்ள கிளர்ச்சியாளர்கள் அவற்றை எடுத்துச்செல்ல திட்டமிட்டு இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இப்படியான ஆயுதக்கடத்தல்கள் மிகஅண்மைக்காலகாகவேதான் நடைபெற்று வருவதாகவும் இவர்கள் தென்கிழக் காசியாவிலிருந்து கொள்வனவு செய்த ஆயுதங்களை இக்கடல்வழியே தான் இந்தியாவிற்கு கடத்திவருவதாகவும் உளவுத்துறை அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையே கைது செய்யப்பட்ட கடத்தல்காரர் ஒருவர் வழங்கிய தகவல்களின் படி தாய்லாத்தின் கரையோரம் தங்களது கப்பலுடன் ஆயுதங்கள் அடங்கிய இன்னுமொரு கப்பலும் காணப்பட்டதாக தெரியவருகின்றது. இக்கப்பலைப் கைப்பற்ற கரையோர காவற் படையினருய், கடற்படையினரும் தீவிர தேடுதல்களை நடாத்தி வருகின்றது.

ஆனால் இக்கப்பலில் உள்ளவர்கள் அந்தமானுக்கு அருகேயுள்ள வேறொரு தீவில் ஆயுதங்களை இறக்கி விட்டு தலைமறைவாகி விட்டதாகவும் பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பொலீஸ் கமிசன்

(கொழும்பு)

இனம் தெரியாத ஆயுத தாரிகளினால் இக்பால் அத்தாஸ்மிரட்டபட்டது தொடர்பாக பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருவதுடன் ஜனாதிபதியின் உத்தரவுக்கு இனங்க விசோட குழுவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது


தற்காலிக இடமாற்றம்

நித்தியா ஸ்ரோர்ஸ்
(மீன்பிடி உபகரண விற்பனை நிலையம்)

இல. 9 நவீன சந்தை (உட்புறம்) என்னும் இடத்தில் இயங்கி வந்தது. தற்போது கட்டிட திருத்த வேலை காரணமாக எமது ஸ்தாபனம்

கோபிகா ஆடை அகம்

இல. 4, நவீன சந்தை (உட்புறம்) என்னும் இடத்தில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளருச்கு அறியத் தருகின்றோம்.

நன்றி

உரிமையாளர்.


''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 14ம் தேதி 68, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசாமி.